
# இடம் பொருள் கலைஞர் 100

**மகிழவன்**

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ)!**




# தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்!

## கண்களுக்கு உரிமை அளித்த கலைஞர்!

“பெரும்பான்மை உடலைப் போன்றது. சிறுபான்மை கண்களைப் போன்றது. உரிமைகள் அனைத்தும் பெரும்பான்மைக்குத்தான் என்று சொல்லி சிறுபான்மையினரைப் புறக்கணிப்பது, கண்களைக் குத்திக் கொள்கிற குருட்டுச் செயலாகும்” என்று முழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சிறுபான்மை மக்களின் நலன் காக்க, சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதிலும், இந்திய அளவில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை கலைஞர் நிகழ்த்தியிருக்கிறார்.

அந்த வகையில், மத வழி மற்றும் மொழி வழிச் சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்திடவும், இந்தியாவிற்கு வழிகாட்டும் வகையில், மாநில சிறுபான்மையினர் ஆணையத்தை முதல்முறையாக 13.12.1989 அன்று தோற்றுவித்தார் கலைஞர். அதன் தொடர்ச்சியாக, சிறுபான்மையினர் பொருளாதாரத்திலும் மேம்பட வேண்டும் என்ற உயரிய நோக்கில் கலைஞர் அரசு ‘இந்திய கம்பெனிகள் சட்டம்-1956’-ன் கீழ் 01.07.1999 அன்று ‘தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக’த்தைத் தோற்றுவித்தது.

### சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாடு

சிறுபான்மையினரைப் பொருளாதாரத்தில் மேம்படுத்தும் நோக்கில், ஆர்வமுள்ளவர்கள் தொழில்முனைவோராக ஊக்கமளித்து, தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குவது, இத்திட்டத்தின் நோக்கம். தனிநபர் கடன் மட்டுமின்றி, கல்விக்கடன், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான நுண்கடன், கைவினைக் கலைஞர்களுக்கான சிறுகடன் ஆகியவையும் வழங்கப்படுகின்றன. உதவித்தொகையுடன் தொழில் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள், பார்சிகள், சமணர்கள் உள்ளிட்ட மதச் சிறுபான்மையினர் இத்திட்டத்தால் பயன்பெறலாம். சிறுபான்மை மக்களுக்கு தனிக்கவனம் செலுத்தும் வகையில், உருவாக்கப்பட்ட இத்திட்டத்தை, அடுத்த இரண்டே ஆண்டுகளில் புதிதாக ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு சிதைத்தது. 2001-இல் அமைந்த அ.தி.மு.க. அரசு ‘தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக’த்தை, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோருக்கான பொருளாதார மேம்பாட்டுக் கழகத்துடன் இணைத்து, அதன் முக்கியத்துவத்தைக் குறைத்தது. 2006-ஆம் ஆண்டு ஐந்தாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர், ‘தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக’த்தை மீண்டும் தனி அமைப்பாக்கினார்.



### திட்டங்களும் பலன்களும்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் இரண்டு விதமான தனிநபர் கடன்கள் வழங்கப்படுகின்றன. திட்டம் ஒன்றின்படி, பயனாளி நகர்ப்புறமாக இருப்பின், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,20,000க்கு மிகாமலும், கிராமப்புறமாக இருப்பின் ரூ.98,000-க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். 6% வட்டி விகிதத்தில் அதிகபட்சக் கடனாக ரூ.20 லட்சம் வரை வழங்கப்படுகிறது. திட்டம் இரண்டின்படி, ஆண்டு வருமானம் ரூ.8 லட்சம் வரை உள்ளவர்களுக்கு அதிகபட்சமாக ரூ.30 லட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. இதில் ஆண்களுக்கு 8%, பெண்களுக்கு 6% வட்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கைவினைக் கலைஞர்களுக்கு ஆண்களுக்கு 5%, பெண்களுக்கு 4% வட்டி விகிதத்தில் அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் இளநிலை, முதுநிலைக் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவர்களுக்கு கல்வியாண்டு ஒன்றுக்கு ரூ.3 லட்சம் முதல் மொத்த கல்விக் காலத்திற்கும் ரூ.15 லட்சம் வரை 3% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. அதேபோல வெளிநாட்டில் இளநிலை மற்றும் முதுநிலைக் கல்வி பயிலச் செல்லும் மாணவர்களுக்கு மொத்த கல்விக்கடனாக ரூ.4 லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரை 3% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது.

**சிறுபான்மை மக்களுக்கு உற்றத் தோழனாக என்றைக்குமே நிற்பது கழக அரசுதான்! அது தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமும் நிரூபணமானது!**

TAMCO

தொழில்முறைப் படிப்பை, இந்தியாவில் பயிலும் சிறுபான்மை மாணவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ரூ.20 லட்சம் வரையும் வெளிநாட்டில் பயிலும் மாணவர்களுக்கு ரூ.30 லட்சம் வரையும் கடனுதவி வழங்கப்படுகிறது. இதிலும் ரூ.8 லட்சம் வரை குடும்ப வருமானம் கொண்ட மாணவர்களுக்குக் கடனுதவி அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவை மட்டுமின்றி, சுய வேலைவாய்ப்பு மற்றும் வெளி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய பணிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகையுடன் 6 மாத காலம் பயிற்சி வழங்கப்படுகிறது. தயாரிக்கப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான உதவித்திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, அதன் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது.

2006-ஆம் ஆண்டு முதல் 2011-ஆம் ஆண்டு வரை சிறுபான்மைச் சமுதாயங்களைச் சேர்ந்த 7,208 பேருக்கு 29 கோடியே 68 இலட்ச ரூபாய் தனிநபர் கடனாகவும், 966 பேருக்கு 10 கோடியே 67 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வாகனக் கடன்களாகவும் வழங்கப்பட்டுள்ளன. கறவை மாடுகள் வாங்கிட, 146 பேருக்கு 27 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாயும், சிறுவணிகக் கடனாக 34 ஆயிரத்து 589 பேருக்கு 46 கோடியே 46 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாயும் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### கண்டுகொள்ளாத அ.தி.மு.க.

2011-ஆம் ஆண்டு பொறுப்பேற்ற அ.தி.மு.க. தலைமையிலான அரசு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை முறையாக நடைமுறைப்படுத்த எந்த முயற்சிகளும் எடுக்கவில்லை. சிறுபான்மை மக்கள் கடன் உதவிகளை பெறுவதற்கு இடைத்தரகர்களை நாடவேண்டிய சூழலும் ஏற்பட்டது. கடன் உதவிகளை வழங்க, அ.தி.மு.க. அரசு காலதாமதம் ஏற்படுத்தியது. இதனால் திட்டத்தின் நோக்கம் சிதைந்தது.

### புத்துயிர் ஊட்டிய ‘திராவிட மாடல் அரசு’

‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற உயரிய இலக்குடன் பொறுப்பேற்ற திராவிட மாடல் அரசு, ஆட்சிக்கு வந்தவுடன் சிறு பான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக சி.பெர்னாண்டஸ் ரத்தின ராஜாவை நியமனம் செய்தது. 2024 -2025-ஆம் ஆண்டில் இக்கழகத்தின் மூலம், ரூ.75 கோடிக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்து, அப்போதே, சுயதொழில் தொடங்க தனிநபர் கடனாக 2 பயனாளிகளுக்கு 3.80 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் வழங்கினார்.

2024 -2025 ஆம் ஆண்டில் இதுவரை 5,046 பயனாளிகளுக்கு 36 கோடியே 44 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. கடன் வழங்க சிறப்பு முகாம்களையும் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு நடத்தி வருகிறது. சிறுபான்மை மக்களுக்கு உற்றத் தோழனாக என்றைக்குமே நிற்பது கழக அரசுதான்! அது தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமும் நிரூபணமானது!

**...வலம் வருவோம்**

## டிஜிட்டல்மயமானது பெரியார் பகுத்தறிவு ஆய்வு நூலகம்!

சென்னை, வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில், ‘பெரியார் பகுத்தறிவு மையம் மற்றும் ஆய்வு நூலகம்’ 1974-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞரால் தொடங்கப்பட்டது. அரை நூற்றாண்டு காலமாக பல்லாயிரக்கணக்கான ஆவணங்கள் மற்றும் இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்களைப் பராமரித்து, ஆய்வாளர்களின் மிகப்பெரிய கருவூலமாகத் திகழும் இந்த மையம், பொன்விழா கொண்டாட்டத்தை ஒட்டி டிஜிட்டல் மயமாகியிருக்கிறது. சென்னை, வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில் தந்தை பெரியாரின் 51-வது நினைவுநாளில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெரியார் பகுத்தறிவு டிஜிட்டல் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்துள்ளார்.

3 தளங்களில் 4 ஆயிரத்து 450 சதுர அடியில், இதுவரை செயல்பட்டு வந்த இந்த ஆய்வு நூலகம் தற்போது டிஜிட்டல் மயத்திற்காக புதிதாக உருவாக்கப்பட்ட 2 ஆயிரத்து 674 சதுர அடி பரப்பளவிலான புதிய கட்டடத்தையும் சேர்த்து, 7 ஆயிரத்து 124 சதுர அடியில் பிரமாண்ட ஆய்வு நூலகமாக உருவெடுத்துள்ளது. இதன்மூலம் டிஜிட்டல்மயமாக்கப்பட்ட திராவிட இயக்க நூல்கள், ஆவணங்கள், தமிழில் வெளியான பிற முக்கிய நூல்களை இனி ‘பெரியார் பகுத்தறிவு டிஜிட்டல் நூலகம் மற்றும் ஆய்வு மைய’த்தில் அமைக்கப்பட்டுள்ள கணினிகள் வாயிலாகப் படிக்கலாம். மேலும், பல இலட்சம் பக்கங்களை டிஜிட்டல்மயமாக்குவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. பழைய ஆவணங்களை எவ்விதச் சேதமும் இல்லாமல், ஆய்வாளர்கள் படிப்பதற்கான வாய்ப்பை, இந்நூலகம் ஏற்படுத்தியுள்ளது.

இனி, பழைய ஆவணங்களைப் பக்கம் பக்கமாகப் புரட்டித் தகவல்களைத் தேட வேண்டிய தேவை இல்லை. தேதியையும், ஆண்டையும் வைத்தே மிகப்பழைய ஆவணங்களையும் சில நிமிடங்களுக்குள் எடுப்பதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

## :ப்ளாஷ்பேக்



### என்றும் கழக உணர்வு!



புதுக்கோட்டை சொ.தமிழினியன்

2009-ஆம் ஆண்டு தலைவர் தளபதி அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது நடத்திய அண்ணா நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டியில் மாவட்ட அளவில், முதல் பரிசைப் பெற்றேன். அடுத்து 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு துணை முதலமைச்சராகவும் கழக இளைஞர் அணிச் செயலாளராகவும் தளபதி அவர்கள் இருந்தபோது மாவட்ட அளவில் முதல் பரிசும், திருவண்ணாமலையில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்றதுடன், தலைவர் முன்பு உரையாற்றுவதற்கான வாய்ப்பைப் பெற்றேன். என் அப்பா கீழக்குறிச்சி எஸ்.ஏ.சொக்கலிங்கம், 35 ஆண்டுகள் கிளைச்செயலாளர். தன்னுடைய இரு மகள்களுக்கும் கனிமொழி என்றும் அஞ்சுகா என்றும் பெயர் சூட்டியவர். இன்று நான் தமிழ்நாடு முழுக்க கழக மேடைகளில் பேசி வருவதை சொல்வதற்கும், பார்ப்பதற்கும் அவர் உயிருடன் இல்லை. ஆனால் அவர் ஊட்டிச் சென்றுள்ள இயக்கப்பற்று என்றும் தொடரும்.

**– புதுக்கோட்டை சொ.தமிழினியன்,**
**தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### எல்லைப் போராட்டத்தில் கழகம்!

1953-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் தேதி, ‘சென்னையை ஆந்திராவுக்குத் தரக்கூடாது’ என்பதை வலியுறுத்தி, அப்போது சென்னை வந்த குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்துக்கு எதிராக, ‘குத்தூசி’ குருசாமி தலைமையில், ஆயிரக்கணக்கான திராவிடர் கழகத் தொண்டர்கள் கறுப்புக்கொடி காட்டினர். தேவிகுளம்- பீர்மேட்டை தமிழகத்துடன் இணைக்கக் கோரி, தி.மு.க.வினர் 110 பேர் செங்கோட்டை நீதிமன்றம் முன்பும், நாகர்கோவில் நீதிமன்றம் முன்பும் மறியல் செய்து மூன்று மாதம் சிறையில் இருந்தனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

701

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131